உ

கடவுள் துணை.

# வள்ளியம்மன் ஆயாலோட்டும்

# குறவஞ்சி.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ். என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 சானத்தியப்ப முதலிவீதி மதராஸ் என் சி.

உ

கடவுள் துணை

## வள்ளியம்மன் ஆயாலோட்டும்

# குறவஞ்சி.

### வெண்பா.

காருலவும்பூவுலகைக் கனிக்காயவலம்வந்த
சீருலவும்போரூரன் றேவியெனத்—தார்புனைந்த
மங்கைவள்ளிநாயகியின் மாதுரத்தைப்பாடுதற்குத்
துங்ககலைவங்கரன்றாள் துணை.

### குறம்.

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதி னாதினனா தினதெந்தினா தினனா

சித்தர்கள்வாழ்மலையருகில் சிறந்தநல்லவனத்தில்
தேவிவள்ளிமான்வயிற்றில் திருவுருவாயமைந்தாள் தின

மான்வயிற்றில்வந்துதித்த வஞ்சிகுறவள்ளி
வானமிர்தம்வேண்டியவள் வாய்விட்டழுகலுமே — தின

நம்பிராஜன்சேனைகளும் நல்லமைந்தர்தாமும்
நாடியந்தவனந்தனிலே யோடிவந்தாரவர்கள் — தின

வனவேட்டையாடியவர் வருகின்றபோது
வள்ளிபசியால்மெலிந்து துள்ளியழுதாளே — தின

அழுகுரல்கேட்டவேடர் ஆச்சரியங்கொண்டு
அதிதுரிதமாகவள்ளி யருகில்வந்துநின்று — தின

மான்வயிற்றில்வந்துதித்த வஞ்சிதனைக்கண்டு
மறவனவன்மனைவியவள் வாரியெடுத்தணைத்தாள் — தின

வாரியெடுத்துமவள் மடிமீதிலமர்த்தி
வண்ணமுகந்தான்துடைத்துக் கண்ணைமுத்தமிட்டு — தின

வார்காதுமுக்குருவி வடிவுகளுஞ்செய்து
வாழ்த்திவள்ளியென்றுசொல்லிப் பேருமிட்டாரப்போ — தின

ஒய்யாரநெற்றியிலே சுட்டிகளுங்கட்டி
ஓசையுள்ளதண்டைகொலுசு பாதத்திலணிந்து — தின

தளராமல்பசியாற்றித் தையல்வள்ளிதன்னை
தாமிருக்குங்குடிசைக்குள்ளே கொண்டுசென்றாரங்கே — தின

வர்னப்பொன்தொட்டிலிலே மாதரசைவளர்த்தி
வகைவகையாய்த்தாலாட்டி மகிழ்ந்திருந்தாரப்போ — தின

மணிகுலுங்குந்தொட்டிலிலே மானின்றமகளும்
மாயநித்திரைசெய்துபின்பு தூயகண்கள்விழித்தாள் — தின

வாரியெடுத்துக்குறத்தி மடிமீதில்வளர்த்தி
வாய்துடைத்துமுத்தமிட்டு வள்ளியரைக்கொஞ்சி — தின

நாளொருமேனியுமாய் நலமுடனேவள்ளி
நாயகியும்வேலவர்க்கு மீறிவளர்ந்தாளே — தின

ஓராண்டீராண்டு மூவாண்டுசென்று
உயர்ந்தநல்லசந்திரன்போல் ஓங்கிவளர்ந்தாளே — தின

ஐந்திரண்டுவயதுதன்னில் கொஞ்சிவிளையாடி
ஆறிரண்டுவயதுதனில் குறக்கூடையேந்தி — தின

கொஞ்சிகொஞ்சிக்குறியுரைத்துக் கோதைவளர்நாளில்
கொம்பனையாள்வள்ளியரைத் தினைப்புனத்துக்கனுப்ப — தின

எழுபேரண்ணமார்கள் இவளருகில்வந்து
இளங்கொடியாள்வள்ளியரைத் தினைப்புனத்துக்கழைக்க — தின

நல்லதென்று அண்ணருக்கு நாயகியாளுரைத்து
நடந்தாளேயிடைகுலுங்க நங்கையருமப்போ — தின

காடுவெட்டிமுள்பொறுக்கிக் கதித்ததினைப்புனத்தில்
கன்னிவள்ளிஆயாலோட்டக் கடுகிநடந்தாளே — தினை
மேடுவெட்டிமுள்பொறுக்கி விரைத்ததினைப்புனத்தில்
மெல்லிவள்ளிஆயாலோட்ட மெல்லநடந்தாளே — தினை
கொஞ்சித்தழைதானொடித்துக் கொற்றவர்கள்வேடர்
கொம்பனையாள்வள்ளியர்க்குப் பரணைகட்டியமைத்தார் — தினை
அண்ணமாரமைத்துவைத்த அழகுள்ளபரணியில்
அம்மைவள்ளிநாயகியும் ஆயாலோட்டியிருந்தாள் — தினை

## தேவாரம்.

கள்ளராமசுரர்காலா கங்கைவேணியர்க்குப்பாலா
புள்ளிமாமயிலிலேறும் புனிதனேபோரூரானே
வள்ளிநாயகியாள்காத்த வளமைசேர்தினைப்புனத்தில்
தெள்ளுநற்குறத்தைப்பாடத் தேசிகாவருள்செய்வாயே

## குறம்.

பத்தினியாள்வள்ளியரும் பரணதிலேயேறி
பரமசிவன்தன்னருளாள் ஆயாலோட்டுகின்றாள் — தினை
சிவப்புக்கவணைதனைச் செங்கையினாலெடுத்து
தேவிவள்ளிநாயகியுஞ் சீக்கிரமாயெறிந்தாள் — தினை

தங்கக்கவணெடுத்துத் தையலந்தவள்ளி
தந்தைதலையைப்போல் வாய்திறந்து ஆயாலோட்டுகின்றாள் தின

ஆயக்கிளிநீலக்கிளி ஆலாலோ ஆலோ
அச்சமுள்ளபச்சைக்கிளி ஆலாலோ ஆலோ தின
புதுநீர்க்கிளிகளாம் ஆலாலோ ஆலோ
தூதுவர்ணப்பூச்சிகளாம் ஆலாலோ ஆலோ தின
வெள்ளைவர்ணக்கிளிகளா ஆலாலோ ஆலோ
விருந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின
பச்சைவர்ணப்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ
பறந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின
சிவப்புவர்ணக்கிளிகளா ஆலாலோ ஆலோ
சேர்ந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின
ஊதாநிறக்கிளிகளா ஆலாலோ ஆலோ
உகந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின
பஞ்சவர்ணக்கிளிகளா ஆலாலோ ஆலோ
பறந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின
சிட்டுநல்லகுருவிகளா ஆலாலோ ஆலோ
சிறிகுருவிபெருங்குருவி ஆலாலோ ஆலோ தின

ஒ ல உ ஓ ஹ

மயினுக்குருவிகளா ஆலாலோ ஆலோ
மஞ்சட்குருவிகளா ஆலாலோ ஆலோ தின

காக்காய்கழுகுகளா ஆலாலோ ஆலோ
காட்டில்வாழும்பட்சிகளா ஆலாலோ ஆலோ தின

கொக்குகளாகோழிகளா ஆலாலோ ஆலோ
கோகிலங்களன்னங்களா ஆலாலோ ஆலோ தின

பட்சிகளாபறவைகளா ஆலாலோ ஆலோ
பறந்துமேயும்பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

அன்னங்களாமயிலினங்காள் ஆலாலோ ஆலோ
அழகுள்ளகோரங்களா ஆலாலோ ஆலோ தின

வள்ளினங்காள்குயிலினங்காள் ஆலாலோ ஆலோ
வனத்தில்மேயும்பட்சிகளா ஆலாலோ ஆலோ தின

சேர்ந்துமவளாயாலோட்டிச் சிந்தைமிகக்களித்து
தினைப்புனத்தில்தோழியுடன் தானிருக்கும்வேளை தின

ஆயாலோட்டும்வள்ளிகுறல் அறிந்துவடிவேலர்
அருமுனிவர்தமையழைத்து ஆலோசனைகேட்டு தின

மயிலேறித்திருநீறிட்டு வடிவேலர்தாமும்
மாதுவள்ளி தினைப்புனத்தில் வந்துநின்றாரங்கே தின

வள்ளியரைக்கண்டுமப்போ வடிவேலர்மயங்கி
மனமிறங்கிவார்த்தைசொல்லி வடிவேலர்நின்றார் — தின

புத்தகத்தைமாற்றடிக்கும் பொற்காலினழகும்
பூஞ்சிலம்புதண்டைகளும் பொற்பீலியழகும் — தின

குரும்பினுழைகாதழகும் கும்பஸ்தனத்தழகும்
கோத்தமுத்துசரமதுபோல் கொம்பனைபல்லழகும் — தின

முருக்கம்பூஇதழழகும் முத்துநிகர்பல்லும்
மொய்குழலின்திருமேனி பனிச்சம்பூநிகர்க்கும் — தி

அழகைக்கண்டுவேல்முருக ராசைமிகக்கொண்டு
அம்மைவள்ளிநாயகியை யழகுமணம்புரிந்தார் — தின

மாலையிட்டுவடிவேலர் மனமகிழ்ந்து அப்போ
மாதுவள்ளியுடனாக வந்தார்திருத்தணிகை — தின

வள்ளிகுறம்பாடினவர் வடிவேலரருளால்
மாறுமல்வையகத்தில் வாழிவாழிவாழி — தின

வள்ளியம்மன் ஆயாலோட்டும் குறவஞ்சி,

முற்றிற்று.

---